**இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்த 30 கணக்கயர்வு அறிக்கைகளில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்படுவதுடன், முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | எகலியகொட, குருவிட, ஓபனாயக, ரத்மலவின்ன, நாமல்தெனிய | நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைச் சொத்துக்கள் திரவத் தன்மை குறைந்த சொத்துக்கள் முதல் தொடர் முறைப்படி வரிசைப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நடைமுறைச் சொத்துக்கள் திரவத் தன்மை தொடர் முறைப்படி வரிசைப்படுத்த வேண்டும். |
| (ஆ) | அயகம, கொடகவெல, பெல்மடுல்ல, பொதுபிடிய | பெறுமானத் தேய்வு சதவீதம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | அம்பேவில, தாமகன, பம்பரகொடுவ, எகலியகொட, எலபாத, கிளிமலே, பொதுபிடிய, கல்தொட, நாமல்தெனிய | காலவதியான விற்பனை செய்ய முடியாத ரூபா 678,110 இற்கான இருப்புக்கள் மற்றும் பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 1,745,144 இற்கான இருப்புக்கள் நடைமுறை சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆணையாளரின் அங்கீகாரத்தை பெற்று ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | முறையான அங்கீகாரத்தின் கீழ் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அம்பேவில, தொடம்பே, வெலிகெபொல , கொடகவெல | ரூபா 2,169,733 இற்கான இறுதியிருப்பு, கொள்வனவு கிரயத்தை மாத்திரம் கவனம் செலுத்தி பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பம்பஹின்ன, அம்பேவில, எலபாத, கொடகவெல, கொலொன்ன, குருவிட, பனாமுர, திபொல்கெடிய | ரூபா 3,792,523 இற்கான நடைமுறை அல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | பம்பரகொடுவ, திபொல்கெடிய | பரீட்சை மீதி அடங்கியுள்ள 370 கணக்கு விடயங்களுக்காக பேரேட்டுக் கணக்குகள் தயாரித்திருக்கவில்லை. | பதிலளித்திருக்கவில்லை. | - மேற்படி - |
| (ஈ) | பம்பஹின்ன, அயகம, கொடகவெல, கஹவத்த, பெல்மடுல்ல, ராஸ்ஸகல, திபொல்கெடிய, ரத்மலவின்ன, கிரிஎல்ல | நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி நிலைமைக் கூற்று தயாரிக்கும் போது ஏற்பட்டிருந்த கணக்கீட்டுக் குறைபாடுகளின் காரணமாக ஆண்டிற்கான மிகை ரூபா 1,352,232 இனால் மற்றும் தேறிய சொத்துக்கள் ரூபா 694,148 இனால் குறைந்திருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | எகலியகொட, ஓபனாயக, அம்பெவில, குருவிட, ராஸ்ஸகல, நிவிதிகல, நாமல்தெனிய | கூட்டுத்தொகை ரூபா 21,170,014 இற்கான பெறுமதியுடைய 177 நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் நாட்குறிப்புப் பதிவுகள் தயாரித்து அதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என. | நாட்குறிப்புப் பதிவுகள் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | குருவிட | நிதி நிலைமைக் கூற்றில் காணப்பட்ட பெற வேண்டிய வட்டி ரூபா 258,567 தொகை தொடர்பாக உரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய பதிவேடுகள் சரியாக பேணப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பெவில, அயகம, தொடம்பே, எகலியகொட, கல்தொட | போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 3,265,320 தொகைக்கான 19 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |

### 1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| கஹவத்த, பம்பஹின்ன, நிவிதிகல, வெலிகேகொல, இரத்தினபுரி, ராஸ்ஸகல, ரத்மலவின்ன, திம்பொல்கெடிய | 10 கணக்கு விடயங்களில் நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி, நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி உடன் இணக்கஞ் செய்யும் போது ரூபா 18,093,828 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் அதற்கு நேரொத்த அறிக்கைகளுடன் இணங்கக்கூடியதாக இருக்க வேண்டும். |

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

| குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அம்பெவில, வெலிகேபொல, பனாமுர, தாமஹன, கிம்பொல்கெடிய, எம்பலிப்பிட்டி | 08 வருடங்களுக்கும் 42 வருடங்களுக்கும் இடைப்பட்ட கால வீச்சு ஒன்று முதல் காணப்படும் 04 வரவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 109,809 தொகை மற்றும் 03 செலவு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 35,665 தொகையாக இருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொங்கல் கணக்குகள் தீர்க்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | குழு/ குழுக்கள் | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| **(அ)** | | **2000 இன் 46 இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்** | | | |
| i. | பம்பஹின்ன, ஓபனாயக, ராஸ்ஸகல, ரத்மலவின்ன, கல்தொட, எலபாத | பிரிவு 14 | வாரப் பயிர்செய்கையாளர்களிடமிருந்து முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 436,208 வாரப் பயிர்ச் செய்கை உரிமை குத்தகைத் தொகை குறிப்பிட்ட காணி உரிமையாளருக்கு செலுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அந்த தொகையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| ii. | கொடகவெல, ஓபனாயக, வெலிகேபொல, திம்பொல்கெடிய, கல்தொட | பிரிவு 22 | விவசாயக் காணிகளில் பொருத்தமான பயிர்கள் மற்றும் வளர்க்கக் கூடிய மிருகங்கள் எவை என தீர்மானிப்பதற்கான வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை. | எதிர் காலத்தில் ஏற்றுக்கொள்ளகூடிய வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படும் என. | - மேற்படி - |
| iii. | ஏகலிகொட, எலபாத, கிளிமலே, இரத்தினபுரி, நிவிதிகல, அயகம, பெல்மடுல்ல, குருவிட | பிரிவு 30 | பயிர்ச் செய்கை செய்யக்கூடிய கூட்டுத்தொகை 4259 ஏக்கர் 737 ரூட் 437 பர்சஸ் விதைக்கும் பரப்பை கொண்ட வயல் காணிகள் எண்ணிக்கை ஒன்று தரிசாகக் காணப்பட்டது. | எதிர் காலத்தில் வயல் காணியை விளை நிலமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| iv. | அயகம, கிளிமலே, கஹவத்த, நிவிதிகல, ஓபனாயக, பனாமுர, பெல்மடுல்ல, | பிரிவு 56(1) | 2023 நவம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 1,424,712 இற்கான நிலுவை ஏக்கர்வரி மீதியொன்று காணப்பட்டது. | நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளை பதிவளிப்பதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது எனவும், நிலுவை வரியின் பகுதியொன்று அறவிடப்பட்டுள்ளது எனவும், | - மேற்படி - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பொதுபிடிய, ராஸ்ஸகல, திம்பொல்கெடிய, மாரபன, பம்பரபொடுவ, தாமஹன | | | மீதித் தொகை திட்டமிடப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| **(ஆ)** | | 1981 ஒக்தோபர் 16 திகதிய 107 இலக்கம் கொண்ட கமநல சேவை ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | | | - |
| | ஏகலியகொட, இரத்தினபுரி, நாமல்தெனிய, கஹவத்த, குருவிட, ஓபனாயக | பந்தி 30.4 | நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத் தேய்விற்காக வழங்கப்பட்டிருந்த அறிவுரைகளுக்கு முரணாக பெறுமானத் தேய்விற்கான விகிதாசாரம் மற்றும் முறை கடைபிடித்திருந்தது. | எதிர் காலத்தில் சரியான பெறுமானத் தேய்வு விகிதாசாரம் மற்றும் முறை கடைபிடிக்கப்படும் என. | சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| **(இ)** | அயகம, பம்பரபொடுவ, தொடரம்பே, எலபாத, எம்பிலிபிடிய, கிளிமலே, கொலன்ன, நிவிதிகல, பனாமுர, பொதுபிடிய | 1986 ஒக்தோபர் 21 திகதிய 264 ஆம் இலக்கம் கொண்ட கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை | நிதி நிலைமை கூற்றின் படி, நீண்ட காலமாக காணப்படும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அறை வாடகை ரூபா 1,085,274 தொகையாக இருந்தது. | நிலுவை அறை வாடகையின் பகுதியொன்று தற்போதும் அறவிடப்பட்டுள்ளதெனவும், நீண்ட காலமாக தகவல்கள் காணப்படாத மீதிகள் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளது எனவும், திட்டமிடப்பட்டுள்ள எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | சுற்றறிக்கையின் படி அறவிடப்பட வேண்டும். |
| **(ஈ)** | அம்பெவில, அயகம, எகலியகொட, கஹவத்த, குருவிட, ஓபனாயக, பெல்மடுல்ல, வெலிகபொல, இரத்தினபுரி, | 2012 பெப்ரவரி 29 திகதிய 04/2012 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 5.6(1) | கமநல வங்கிகளுக்குரிய அனைத்து கணக்குகளும் கமநல சேவைக் குழுவின் வருடாந்த இறுதிக் கணக்குகளுடன் உட்படுத்தி இணைந்த நிதிக் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த | எதிர் காலத்தில் இணைந்த நிதிக் கூற்றொன்று தயாரிக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திம்பொல்ககெடிய, கல்தொட, நாமல்தெனிய, பம்பஹின்ன, கொடகவெல | | போதிலும், அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | | |
| **(உ)** | | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | | |
| i. | பம்பஹின்ன, கஹவத்த, கலவான, ராஸ்ஸகல, ரத்மலவின்ன, கிரிஎல்ல, பம்பரகொடுவ, தொடம்பே | நிதிப் பிரமாணம் 237(ஆ) | கூட்டுத்தொகை ரூபா 2,767,079 இற்கான 145 கொடுப்பனவுகளுக்காக இருப்புச் சான்றிதழ் காணப்படவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| ii. | கோலொன்ன, இரத்தினபுரி, கலவான, ராஸ்ஸகல, தொடம்பே, நாமல்தெனிய, கல்தொட, பம்பஹின்ன, ஓபனாயக, எகலியகொட, மாரபன, குருவிட அம்பவில, எம்பிலிப்பிட்டி, வெலிகபொல | நிதிப் பிரமாணம் 257 | குழு மற்றும் விவசாய வங்கிகளுக்காக மென்பொருள் முறைமையொன்று தயாரிப்பதற்காக ரூபா 3,753,977 இற்கான தொகையொன்று தலைமை அலுவலகத்திற்கு செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது குறிப்பிட்ட உபகரணங்கள் மற்றும் மென்பொருள் வசதிகள் கிடைத்திருக்கவில்லை. | கமநல சேவை மாவட்ட அலுவலகத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானம் ஒன்றின் படி இந்தக் கொள்வனவுக்கான கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தென. | - மேற்படி - |
| (ஊ) | அம்பவில, கொடகவெல, வெலிகபொல, திம்பொல்கெடிய, கல்தொட | 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் பிரிவு 38(ஊ) | போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படும் என. | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு
### 2.1 நிதி விளைவுகள்

17 கமநல சேவைக் குழுக்களின் தேறிய செயற்பாட்டு முன்னேற்றம் ரூபா 10,704,203 தொகை மற்றும் 13 கமநல சேவைக் குழுக்களின் தேறிய செயற்பாட்டுப் பின்னடைவு ரூபா 2,471,758 தொகையாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு
### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கல்தொட | 2010 ஆண்டு முதல் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 4,259,209 இற்கான கணக்கு மீதிகளின் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | விரைவாக தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாமஹன, கொடகவெல, வெலிகபொல, அம்பவில | நீர்ப்பாசன வேலைகளை புனர்நிர்மாணம் செய்யாமையால் 2023 ஆண்டின் போகங்களுக்கான பயிர்ச் செய்கைகள் சேதங்கள் தொடர்பாக ரூபா 16,457,263 தொகை செலுத்த நேரிட்டிருந்தது. | ஏற்பாடுகள் கிடைத்திருக்கவில்லை. | நீர்பாசன வேலைகளை புனர்நிர்மாணம் விரைவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தாமஹன, நிவிதிகல, அயகம, கிளிமலே, கிரிஎல்ல, தொடம்பே, எலபாத, மாரபண, எம்பிலிப்பிட்டி, ஓபனாயக, கொடகவெல | காணி மற்றும் நிலையத்தின் உரிமையை உரித்தாக்கியிருக்கவில்லை. | இதற்காக கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆதனங்களின் உரிமையை தீர்த்துக்கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பம்பஹின்ன, அம்பேவில, அயகம, பம்பரபொடுவ, | நீண்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 41,469,924 தொகைக்கான 853 | எதிர் காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கடன் மீதிகளை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கும், கடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாமஹன, தொடம்பே, எகலியகொட, எலபாத, எம்பிலிப்பிட்டி, கிளிமலே, கொடகவெல, கஹவத்த, கொலன்னே, குருவிட, நிவிதிகல, ஓபனாயக, பல்லபெத்த, பனாமுர, பெல்மடுல்ல, பொதுபிடிய, வெலிகேபொல , இரத்தினபுரி, கலவான, ராஸ்ஸகல, திம்பொல்கெடிய, ரத்மலவின்ன, கல்தொட, நாமல்தெனிய, கிரிஎல்ல, மாரபன | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் மீதிகள் 2023 திசெம்பர் 31 அளவில் அறவீடு செய்வதற்கு/ தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கலவான | பிரிவின் 07 விவசாய ஆய்வு உற்பத்தி உதவியாளர்களுக்கு விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் வழங்கியிருந்த ரூபா 118,272 இற்கான பண்டங்கள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய தொகை 2024 மே மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைக் கடன் மீதிகள் தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | எலபாத | நிதிக் கூற்றுக்களில் ரூபா 599,301 இற்கான இனங் காணப்படாத நிலையான சொத்துக்கள் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | விரைவான நிலையான சொத்துக்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | கொடகவெல | அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான 122 அணைக்கட்டுகள் காணப்பட்டதுடன், அவற்றில் 31 அணைக்கட்டுகளை நில அளவை மேற்கொண்டு அதற்குரிய தரைப் | ஏற்பாடுகள் கிடைக்கும் அடிப்படையில் அளவை அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என. | விரைவாக அணைக் கட்டுகளின் அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதேசத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (உ) | கொடகவெல | குறுகிய காலப் பயிர்கள், பயிர் செய்யக்கூடிய 108 ஏக்கர் 2023 ஆண்டில் பயிர் செய்திருக்காத போதிலும், அதற்கான காரணங்களை விசாரணை மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என. | விரைவாக பயிர்ச் செய்கை அலுகல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | கோடகவெல | 2023/24 பெரும்போக விவசாய அலுவல்கள் மேற்கொண்டிருந்த 1281 விவசாயிகளில் 412 பேர்களுக்கு அறுவடையின் பின்னரும் உர மானியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உர மானியத் தொகை வழங்கல் தலைமை அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது . | முறைப் பிரகாரம் உர மானியத் தொகை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | கல்தொட தாமஹன எம்பிலிபிடிய | இலக்கம் 7/3/19/S.A.V/2023 மற்றும் 2023 ஒக்தோபர் 06 திகதிய கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் படி ஏற்றுமதி சந்தையை இலக்காக கொண்ட புதிய இளைஞர் விவசாய தொழில் முயற்சியாளர்களின் ஆக்கங்களுக்காக திட்டமிடப்பட்ட சுறுசுறுப்பான கிராமிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒருவரிடம் ரூபா 500,000 தொகை மற்றும் அரச பங்களிப்பு ரூபா 500,000 ஆக மொத்தச் செலவு ரூபா 54,000,000 தொகை பயன்படுத்தி 54 பசுமை இல்ல அலகுகள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களுடன் சரியான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்படாமல் இந் நிர்மாண வேலைகள் ஒப்படைக்கப்பட்ட காரணத்தினால் 6 மாதங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் பசுமை இல்லங்கள் நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்தல், குழாய் நீர் முறைமையை | பதில் வழங்கப்படவில்லை. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக மேற்கொள்ள வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுவுதல், தண்ணீர் பம்பு மற்றும் வழங்க வேண்டிய பயிர்ச் செய்கை உபகரணங்கள் வழங்குதல பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும், மேலும், சில விவசாயிகளினால் பல்வேறு பொருளாதார வசதியீனங்களுக்கு மத்தியில் ரூபா 500,000 இற்கான தொகை கடனாக பெற்று இதற்காக பங்களிப்பு வழங்கியிருந்ததுடன் செயற்திட்ட பலவீனங்கள் மற்றும் தாமதங்களின் காரணத்தினால் செயற்திட்டம் தொடர்பாக இருந்த முயற்சி நலிவடைந்திருந்தது. | | |
| (ஏ) | நாமல்தெனிய | i. வயற் காணிகளை அறுதியாக இனங்காண்பதற்கு தேவையான முக்கியமான தகவல்களை உட்படுத்தி ஒவ்வொரு பிரிவிலும் பேணப்பட்டு வரும் 1995 ஆண்டு முதல் பேணப்பட்டு வந்த பழைய வயற் காணிப் பெயர் பதிவேடு, அந்தப் பழைய ஏடுகளின் தகவல்களை உட்படுத்தி 2015 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த புதிய வயற் காணிப் பெயர்ப் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யும் போது 457 காணித் துண்டுகளுக்கான வித்திசாயங்கள் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | வயற் காணிப் பதிவேடு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| | | ii. அதற்கான காரணம் என வயற் காணிகள் இரண்டு பிரிவுகளில் பதிவு செய்யப்படல், பழைய வயற் காணிப் பதிவேட்டில் அடங்கியுள்ள வயல்களில் மண் நிரப்பப்பட்ட காரணத்தினால் தரைக் காணியாக மாறி இருந்ததுடன் புதிய வயற் | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| காணிப் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டு இருக்காமை, பழைய வயற் காணிப் பதிவேட்டின் படி அரசுக்கு உரித்தாகியிருந்த கணிசமான அளவு வயற் காணி எண்ணிக்கை பல்வேறு நபர்களுக்கு சாட்டப்பட்டிருந்தது என புதிய வயற் காணிப் பதிவேட்டில் பிரதிசெய்து இருத்தல், பழைய வயற் காணிப் பதிவேட்டில் தெளிவாக குறிப்பிட்டிருந்த வயற் காணிகள் எதுவும் பௌதீக ரீதியாக காணப்படும் இடத்தை சுட்டிக் காட்டுவதற்கு கமநல சேவை நிலையத்திற்கு முடியாமல் இருத்தல், பழைய வயற் காணிப் பதிவேட்டில் பெயர் பதியப்பட்டு காணப்பட்ட போதிலும், வேறு பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படுவதனால் புதிய வயற் காணிப் பதிவேட்டில் உட்படுத்தப்படாத வயற் காணிகள் காணப்படல், வேறு மாவட்டதிற்கு உரிய வயல்கள் நாமல்தெனிய வயற் காணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருத்தலும் ஆகும். | | |
| iii. மிகவும் குறைந்த தெரிவு ஒன்றாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை ஒன்றின் போதும், வயற்காணிப் பதிவேடு உரிய முறையில் பேணப்படாமையால் பங்கமுற்ற மொத்த வயற் காணி எண்ணிக்கை மொத்தமாக 20 ஏக்கர் காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை. | - மேற்படி - |
| iv. மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த வழுக்களை பதிவு செய்தல், ஒழுக்காற்று | பதில் வழங்கப்படவில்லை. | தாபனக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டுப்பாடு தொடர்பான தாபனக் கோவையின் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தியோகத்தரினால் மேற்கொள்ளக் கூடிய குற்றச் செயல்கள் தொடர்பாக முதலாவது அட்டவணையின் 12 ஆம் பந்தியின் படி அரச ஆவணங்களை மாற்றுதல், உருத்திரிபுறுத்தல் மற்றும் போலியான ஆவணங்கள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் என அவதானிக்கப்பட்டது. எனினும், தாபனக் கோவையின் பகுதி II அத்தியாயம் XLVIII பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை இதுவரை எடுத்திருக்கவில்லை. | | தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பம்பஹின்ன, எஹலியகொட, எம்பிலிபிட்டிய கலவான, கிரிஎல்ல | 04 வருடங்கள் முதல் 20 வருடங்கள் வரையான காலப் பகுதியிலிருந்து 05 உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் விளைவற்றுக் காணப்பட்டது. | உத்தியோகபூர்வ வாசங்தலங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பிரதி ஆணையாளரின் அறிவுரையின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது எனவும். | உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கல்தொட | 2020 இல் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 219,745 தொகை கிரயத்தையுடைய கிராமிய உணவக கட்டிடம் குறிப்பிட்ட கருமத்திற்காக 2024 மே 13 திகதியளவிலும் பயன்படுத்தி இருக்கவில்லை. | பதில் அளித்திருக்கவில்லை. | விரைவாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பம்பஹின்ன எஹலியகொட | ரூபா 626,766 பெறுமதியை உடைய 7 இயந்திரங்கள் | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் | விரைவாக பயன்படுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| எம்பிலிபிட்டிய<br>கஹவத்த<br>கொலொன்ன<br>பல்லெபெத்த<br>திம்புல்கெடிய | மற்றும் டிரக்டர் வண்டி ஒன்று விளைவற்றுக் காணப்பட்டது. | செயற்படுத்தப்படாமை சிதைவுற்ற நிலைமையில் காணப்படல் ஆகிய காரணங்கள் காட்டப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| அயகம,<br>பம்பரபொடுவ,<br>எலபாத, கிலீமலே,<br>கொடகவெல,<br>நிவிதிகல,<br>பொதுபிடிய,<br>திபொல்கெடிய,<br>வெலிகபொல | 09 கமநல சேவை நிலையங்களில் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 57 விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தருக்கான வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக மாவட்ட அலுவலத்திற்கு அறிவுருத்தப்பட்டுள்ளது என. | வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**4. கமநல வங்கிகள்**

| | குழு / குழுக்கள் | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொதுபிடிய | 2014 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 246,370 இற்கான தொங்கல் கணக்கின் வரவு மீதி மற்றும் 2015 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 35,241 இற்கான தீர்க்கப்படாத மீதியை தீர்த்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தொங்கல் கணக்கு மற்றும் தீர்க்கப்படாத கணக்குகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அம்பேவல<br>ரத்மலவின்ன | ரூபா 1,116,065 தொகைக்கான கணினிகள் மற்றும் உபகரணங்களுக்காக பெறுமானத்தேய்வு சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்குகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பம்பஹின்ன,<br>அம்பேவில, அயகம,<br>மாரபன, தாமகன,<br>பம்பரபொடுவ,<br>தொடம்பே,<br>எலபொத, கிலீமலே,<br>எஹெலியகொட,<br>குருவிட, கிரிஎல்ல,<br>எம்பிலிபிட்ட, | 1,322 கடன்பட்டோரிடம் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலுவைக் கடன் மீதி ரூபா 24,861,759 தொகை காணப்பட்டது. | பணம் அறவிடப்பட்டு வருகின்றது எனவும், கடன்பட்டோருக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் நீண்ட காலமாக அறவிடப்படாத மீதிகளை பதிவழிப்பதற்காக | நிலுவைக் கடன் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கஹவத்த, நிவிதிகல, ஓபனாயக, பனாமுர, பொதுபிடிய, வெலிகபொல, இரத்னபுரி, கலவான, திபொல்கெடிய, கல்தொட | | கமநல தீர்ப்பு சபைக்கு அனுப்புவதற்கும் மீதியான தொகையினை திட்டமிடப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (ஈ) | பம்பஹின்ன, அயகம, தொடம்பே, எலபொத, கிலீமலே, கொடகவெல, கொலொன்ன, நிவிதிகல, ஓபனாயக, பெல்மடுல்ல, பொதுபிடிய, கலவான, ராஸ்ஸகல, திபொல்கெடிய, ரத்மலவின்ன, கல்தொட, நாமல்தெனிய, கிரிஎல்ல | கடன் செலுத்தும் காலவரையறையை மிகைத்திருந்த போதிலும் 218 கடன்பட்டோரிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,818,258 கடன்தொகையில் கடன் தவணைகள் ஏதும் மற்றும் வட்டி செலுத்திருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | நிலுவைக் கடன் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | பம்பஹின்ன, அம்பேவில, அயகம, பம்பரபொடுவ, எம்பிலிபிடிய, கஹவத்த, கொலொன்ன குருவிட, நிவிதிகல, ஓபனாயக, பல்லேபெத்த, பனாமுர, பொதுபிடிய, வெலிகபொல, இரத்தினபுரி, கலவான, ராஸ்ஸகல, திம்பொல்கெடிய, ரத்மலவின்ன, கல்தொட, நாமல்தெனிய, கிரிஎல்ல | இறந்துள்ள 107 கடன்பட்டோர் மற்றும் ஊனமுற்ற 02 கடன்பட்டோர்களிடம் ரூபா 1,965,757 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | நிலுவைக் கடன் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | பம்பஹின்ன, அம்பேவில, அயகம, தாமஹன, தொடம்பே, எலபாத, எம்பிலிபிடிய, கிலீமலே, கொடகவெல, | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 48096 சேமிப்புக் கணக்குகளில் 28132 கணக்குகள் செயற்படாத நிலையை அடைந்திருந்தது. | எதிர்காலத்தில் செயற்படாத கணக்குகளை செயற்படு கணக்குகளாக மாற்றுவதற்கும் சேமிப்பு திறமையை அபிவிருத்தி செய்வதற்கும் | செயற்படாத கணக்குகளை செயற்படு கணக்குகளாக மாற்ற வேண்டும். |

குருவிட, கஹவத்த, பனாமுர, கொலொன்ன, நிவிதிகல, ஓபனாயக, பல்லேபெத்த, பெல்மடுல்ல, பொதுபிடிய, ராஸ்ஸகல, வெலிகபொல, இரத்தினபுரி, கலவான, திம்பொல்கெடிய, இரன்மலவின்ன, கல்தொட, கிரிஎல்ல, நாமல்தெனிய, மாரபன நடவடிக்கை எடுக்கப்படும் என.